செய்தி வெளியீடு எண் : 688 நாள்: 28.04.2022

## செய்தி வெளியீடு

வணிகவரி மற்றும் பதிவுத் துறையின் 2022-2023 - ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது அலுவலகங்களில் பணியாற்றும் பொதுமக்களின் வசதிக்காக விடுமுறை நாளன்று பதிவுப் பணியை மேற்கொள்ளும் வகையில் சார் பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமைகளிலும் செயல்படும் என்ற அறிவிப்பினை மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) வெளியிட்டார்.

இந்த அறிவிப்பிற்கிணங்க மாநிலத்தில் அதிகம் பதிவு மேற்கொள்ளப்படும் 100 அலுவலகங்கள் வார இறுதி நாளான சனிக்கிழமைகளில் இயங்கும் வகையிலும் அவ்வாறு இயங்கும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் பதிவுகளுக்கு கட்டணமாக ரூ.1000-/ வசூலிக்கப்படும் என்றும் இதனால் ஏற்படும் கூடுதல் பணிச்சுமை மற்றும் பணியாளர்களது நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சனிக்கிழமை பணி நாளை ஈடு செய்யும் விதமாக வாரநாட்களில் வேலை குறைந்த ஏதேனும் ஒரு நாளில் விடுப்பு வழங்கிட ஏதுவாக உரிய மாற்று ஏற்பாடு செய்யும் வகையிலும் அரசாணை (நிலை) எண்.64, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 28.04.2022 இல் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு செய்த நாளான 28.04.2022 அன்றே இந்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. .

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in